

சேலம் மத்திய மாவட்டம் ஓமலூர் கிழக்கு ஒன்றியத்தின் சார்பில் துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தையொட்டி ஒன்றிய கழக பொறுப்பாளர் ஓ.எம்.ரமேஷ் தலைமையில் நடைபெற்ற கழக பொதுக்கூட்டத்தில் கழக கொள்கைபரப்பு செயலாளர் திருச்சி சிவா கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசினார். மற்றும் மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் இரா.இராஜேந்திரன், பொருளாளர் மு கார்த்திகேயன், தலைமைச் செயற்குழு சி.ராஜேந்திரன், பொதுக் குழு குப்புசாமி, ஒன்றிய செயலாளர்கள் செல்வகுமார், பாலசுப்பிரமணி, அய்யப்பன், சண்முகம், அழகிரி ரமேஷ், பேரூர் கழக செயலாளர் ஏ.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி பேரூராட்சி எருக்கட்டாஞ்சேரி கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் தமிழ்நாட்டில் முதன்முறையாக அச்சு இயந்திரத்தை நிறுவி கிறிஸ்தவ மக்களின் புனித நூலான விவிலியத்தை புதிய ஏற்பாடு எனும் பெயரில் தமிழில் அச்சிட்டு வெளியிட்ட சீகன் பால்கு அவர்களுக்கு ரூ.7 கோடி மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் அரங்கம் கட்டுவதற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் .மு.பெ.சாமிநாதன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன். முன்னிலையில் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். உடன் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார். மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.ஸ்ரீகாந்த் மற்றும் பலர் உள்ளனர்.

### கரூர் மாவட்டத்தில்

# கோவில் நிலப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேச்சு!

கரூர், டிச. 25 -

கரூர் மாவட்டத்தில் கோவில் நிலப்பிரச்சினைக்கு விரைவில் நல்ல தீர்வு எட்டப்படும் என பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி தெரிவித்தார்.



கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தொகுதி, புகழூர் நகராட்சி, புகழூர் காமாட்சி மகாலில், 648 பயனாளிகளுக்கு, ரூ. 5.98 கோடி மதிப்பிலான, பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் புகழி மலையைச் சுற்றி வசிக்கும் 414 குடும்பங்களுக்கு, அவர்களின் 50 வருடத்திற்கும் மேல் கனவாகவே இருந்த, நிலையை மாற்றி வீட்டு மனை பட்டாக்களை வேலாயுதம்பாளையத்தில் நடைபெற்ற விழாவில் கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

கரூர் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார். அரவக்குறிச்சி தொகுதி எம்.எல்.ஏ ஆர் . இளங்கோ முன்னிலை வகித்தார்.

விழாவில் வி.செந்தில் பாலாஜி பேசியதாவது:

இந்த அரசு நிகழ்ச்சியின் மூலமாக ஒரு உறுதியை உங்களுக்குச் சொல்கின்றேன். இந்த நிலங்களில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று 1967 மற்றும் 87இல் அரசின் மூலமாகப் பட்டா வழங்கப்பட்ட இடங்கள் ஒன்று. மற்றொன்று அறநிலையத்துறைக்குச் சொந்தமான இடங்கள். இதில் 1967 மற்றும் 8767 என்பது மைனர் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட அந்தப் பட்டாக்களும் 87ஐப் பொறுத்தவரை UDR செட்டில்மெண்டில் கொடுக்கப்பட்ட பட்டாக்களுக்கும் எந்தவிதமான நமக்குத் தீமையும் ஏற்படாது. அது உடனடியாகப் பத்திரப்பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு விரைவில் உங்களுக்கு ஒரு நல்ல தீர்வு எட்டப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அன்போடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனவே கடந்த காலங்களில் இருந்த குளறுபடிகளைச் சரிசெய்து, மாவட்ட ஆட்சித்தலைவருடைய தலைமையிலே அதற்கான முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட துறையினுடைய உயர் அலுவலர்களுடன் சென்னையிலே பலமுறை கூட்டங்களை நடத்தி எந்தெந்த இடங்கள் கரூர் மாவட்டத்தில் நேரடியாகக் கோயில்களின் பெயரில் இருக்கின்றன. எந்தெந்த இடங்களில் ஏற்கனவே பட்டாக்கள் வழங்கப்பட்டது என்பதையெல்லாம் பிரித்துப் பார்த்த வகையில் ஏறத்தாழ 6,000த்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் பட்டாக் கள் வழங்கப்பட்டும் இன்னும் கோயில் பெயரில் அந்த நிலங்கள் இருப்பதைக் கண்டறியப்பட்டு.

கோயில் ஆவணங்களிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி, மீதமிருக்கக்கூடிய கோயில் பெயரில் இருக்கக்கூடிய நிலங்களை மட்டும் கோயில் பதிவேட்டில் அதைச் செயல்படுத்த வேண்டும். அதை கோயில் பதி வேட்டில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன.

அந்த வகையில் இங்கே வந்திருக்கக்கூடிய தாய்மார்கள். பெரியவர்கள் உங்களிடத்தில் நான் அன்போடு சொல்வது, இந்த இரண்டு நிகழ்வின் மூலமாகப்பட்டாக்களைப் பெற்றவர்களுக்கு விரைவில் அந்தப் பத்திரப்பதிவு செய்வதற்கான நடவடிக்கை அரசு எடுக்கும்.

புகழூர் நகராட்சி அறிவுசார் மையத்தில் பயின்ற 4 மாணவர்கள் அரசுப் பணிகளுக்குச் செல்லக் கூடிய அளவிற்கு ஒரு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று சொன்னால், தமிழ்நாட்டில் குறிப்பாக உயர்கல்வியில் இந்தியாவில் முதல் நிலை என்ற நிலையை உருவாக்கியதோடு. இந்தியாவிலேயே உழைக்கின்ற, மகளிர் தொழிற்சாலைகளில் பணிபுரியக்கூடியவர்கள் 43 விழுக்காடு தமிழ் நாட்டில் தான் பணிபுரி கிறார்கள் என்ற அளவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பெருமையைச் சேர்த்திருக்கின்றார்கள்.

இவ்வாறு செந்தில் பாலாஜி பேசி னார்.



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் தந்தை பெரியார் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்வில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், மாவட்ட பொருளாளர் துரைராஜ், டோல்கேட் சுப்பிரமணி, கண்ணன் மாவட்டத் துணை அமைப்பாளர் விஜயா ஜெயராஜ் மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆனந்த்,மாநில மாணவரணி துணை அமைப்பாளர் பி.எம்.ஆனந்த், பகுதிச் செயலாளர்கள் மோகன்தாஸ் கமல் முஸ்தபா இளங்கோ , கோட்ட தலைவர் துர்கா தேவி , ராமதாஸ் பந்தல் ராமு கலைச்செல்வி கவிதா மற்றும் கழக நிர்வாகிகள் பி.ஆர். பாலசுப்பிரமணியன் தர்மசேகர்உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு பெரியாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்கள்...

### செல்வ .செங்குட்டுவன் ஏற்பாட்டில்!திருமருகல் வடக்கு ஒன்றியம்

# ஆலத்தூரில் 42 குடும்பத்தினர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் முன்னிலையில்!

நாகை, டிச. 25 -

நாகை மாவட்டம் திருமருகல் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செல்வ. செங்குட்டுவன் ஏற்பாட்டில் திருமருகல் வடக்கு ஒன்றியம் ஆலத்தூரைச் சேர்ந்த அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் 42 குடும்பத்தினர் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு திருமருகல் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செல்வ. செங்குட்டுவன் தலைமை தாங்கினார். ஆலத்தூர் கிளை செயலாளர்கள் சந்திரசேகர்,சிவானந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சி யில் ஆலத்தூர் கிராமத்தில் இருந்து அ.திமு.க. நிர்வாகி முருகவேல் தலைமையில் 42 குடும்பத்தினர் அக்கட்சியில் இருந்து விலகி நாகை மாவட்ட செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

கழகத்தில் இணைந்தவர்களுக்கு நாகை மாவட்ட கழக செயலாளர் என். கௌதமன், திரும ருகல் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செல்வ. செங்குட்டுவன் ஆகியோர் இருவண்ண கைத்தறி ஆடை அணிவித்து கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் பாண்டியன், ஒன்றிய பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சுபாஷ், முன்னாள் ஊராட்சி தலைவர் கணேசன், ஒன்றிய விவசாய அணி துணை அமைப்பாளர் செல்வராஜ், மற்றும் தி.மு.க. கிளை நிர்வாகிகள் மாரியப்பன், ராமச்சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மத்திய மாவட்டம் பவானியில் பவானி ஏ.பி.என்.கோவிந்தன் தலைமையில் பல்வேறு கட்சிகளில் இருந்து 500க்கும் மேற்பட்டோர் அக்கட்சிகளில் இருந்து விலகி மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். கழகத்தில் இணைந்த அனைவரையும் மாவட்டக் கழக பொறுப்பாளர் வரவேற்றார். நிகழ்வில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்வில் பவானி தொகுதி கழக பொறுப்பாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், பவானி நகர் மன்ற தலைவர் சிந்தூரி இளங்கோ, ஒன்றிய கழக செயலாளர்கள் கேபிள் சேகர், மகேந்திரன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர்.கோவிந்தராஜர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

# பரமத்தி வேலூரில் கலைஞர் நூலகம் திறப்பு!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி திறந்து வைத்தார்!

நாமக்கல், டிச. 25 -

நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதி பரமத்தி வேலூரில் பஸ் நிலையம் அருகே தமிழ்நாடு துணை முதலமைச்சரும், திமுக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழா நடைபெற்றது.

நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி துணை அமைப்பாளர் பா.நவலடி ராஜா ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்விழாவில் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்,மூர்த்தி கலந்து கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் நூலகத்தை திறந்து வைத்தார்.

இவ்விழாவில் ஒன்றிய செயலாளர்கள் தனராசு, லலித்குமார், பேரூர் கழக செயலாளர்கள் முருகன், ரமேஷ்பாபு, ராமலிங்கம், கருணாநிதி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.பாலாஜி, துணை அமைப்பாளர்கள் பூக்கடை சுந்தர், மல்லை ஜெகதீசன், கார்த்திகேயன், கதிரவன் சேகர், முரளி,

சார்பு அணி நிர்வாகிகள் கண்ணன், மகிழ் பிரபாகரன், வைரமணி, தனகரன், கே.சி.மோகன், இளைஞர் அணி அமைப்பாளர்கள் கௌதம் பீட்டர், விக்னேஷ், தினேஷ், சம்பத், கதிர், மாணவரணி தமிழ் செல்வன், முன்னாள் அவைத் தலைவர் கே.ஆர். முருகேசன் மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஈரோடு செ. அரங்கராசன்

### டிசம்பர் 25 (2002)



ஈரோடு நகரக் கழகச் செயலாளராக மூன்று முறை சிறப்பாகப் பணியாற்றினார்.

ஈரோடு நகர்மன்ற உறுப்பினராக இருமுறையும், பின்னர் 1986ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நகர்மன்றத் தலைவராகவும் இருந்தபோது நீண்டகால குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்து மக்களுக்கு தினந்தோறும் குடிநீர் கிடைத்திட ஏற்பாடு செய்தார்.

விலைவாசி; இந்தி எதிர்ப்பு; இலங்கை தமிழர் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.


தலைமைக் கழகம்

தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கு. காசிநாதன்

### டிசம்பர் 25 (1991)



தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையை இளமைக் காலம் முதல் தனது இறுதிக் காலம் வரை கடைபிடித்து வந்தவர்.

கழகம் துவங்கிய காலத்திலேயே கொடுங்கையூர் பகுதியில் கழகம் வளர்க்கப் பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

கிளைச் செயலாளராகவும், புழல் ஒன்றிய அவைத் தலைவராகவும், பின்னர் கொடுங்கையூர் சென்னை மாநகராட்சிக்குள் இணைந்த போது பெரம்பூர் 1வது வட்டக் கழகச் செயலாளராகவும் பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.